*கவனிக்க.- 2010.11.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1682 - 2010 නොවැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2010.11.26

*1682 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1834 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1840 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதி அமைச்சு

### சட்ட அறிக்கைகளை சிங்கள, தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் கிளையின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

நீதி அமைச்சின் சட்ட அறிக்கைகளை சிங்களம்/தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் கிளைக்கு இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **கல்வித் தகைமைகள்**.- (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி மூலம் இலக்கியம் மற்றும் கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரு அமர்வில் ஆகக்குறைந்தது 5 பாடங்களுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

(ii) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்

3. **தொழில் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) தட்டெழுத்துப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.

4. **அனுபவம்**.- சிங்களம், தமிழ் ஒரு நிமிடத்துக்கு 20 சொற்கள் வேகத்தில் தட்டெழுத்துச் செய்யும் ஆற்றல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

6. **சம்பள அளவுத்திட்டம்**.- எம்என் -1-2006ஏ - மாதாந்தம் ரூ. 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூ. 22,040.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- (i) தொழில் சோதனை.- சிங்களம்/தமிழ் தட்டெழுத்துச் செய்யும் (ஆகக்குறைந்த வேகம் ஒரு நிமிடத்திற்கு 20 சொற்கள் வீதம் 20 நிமிடங்களுக்குள் தட்டெழுத்துச் செய்தல்).

(ii) தொழில் சோதனையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகளில் வெற்றிடமான தொகையைவிட இரு மடங்கானோர் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரர்களில் திறமை அடிப்படையில் உளதாம் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

*ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்*.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். விதவைகள் அநாதைகள்/ஓய்வூதியத்திற்கு பணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்போதுள்ளதும் இதன் பின்னர் விதிக்கப்படுகின்றதுமான சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக செயற்படுதல் வேண்டும். அத்துடன் தாபனக்கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் தற்போது வழங்கப்பட்டுள்ளதும் வழங்கப்படவுள்ளதுமான கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். தாபனக்கோவையின் II அத்தியாயத்தின் 1-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையதாகின்றன.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரியக்கூடியவாறு சிறந்த உள மற்றும் தேகாரோக்கியத்துடன் இருக்க வேண்டுமென்பதுடன், அரச மருத்துவ பரிசோதனையில் சித்திபெறுதல் வேண்டும்.

(iv) பதவி கிடைத்து மூன்று வருடங்களுக்குள் (03) வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.

(v) நியமனத் திகதியிலிருந்து மூன்றுவருட கால (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்பட்டதாகும்.

(vi) எல்லா உத்தியோகத்தர்களும் சேவையில் நியமிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் (05) செல்வதற்கு முன்னர் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக இரண்டாம் மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் முதலாம் மொழியாக கருதப்படுகின்ற மொழி தவிர ஏற்புடையவாறு சிங்களம் அல்லது தமிழ் மொழி இதன்படி இரண்டாம் மொழி மூலமாகக் கருதப்படும் (பொது நிருவாகச் சுற்றறிக்கை 07/ 2007 இல் பெறப்படவேண்டிய தேர்வின் மட்டம் தொகுதி II)

*விண்ணப்பிக்கப்படவேண்டிய முறை*.- (i) இவ்வறிவித்தலின் மாதிரிப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான தாளில் இரு பக்கத்திலும் தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2010.12.10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/ நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பம் இட்டு அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் "சட்ட அறிக்கைகளை சிங்களம்/ தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் கிளையின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்) பதவிகளுக்கான விண்ணப்பம் - 2010" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) *பரீட்சைக் கட்டணங்கள்*.- எல்லாப் பரீட்சார்த்திகளினாலும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 தொகையொன்றை "செயலாளர், நீதி அமைச்சு" என்ற பெயரில் மக்கள் வங்கி நகர மத்திய கிளையின் 176-1001-7-902-5-180 ஆம் இலக்க கணக்கில் வரவு வைக்குமாறு செலுத்தப்படுதல் வேண்டும். பணம் செலுத்தப்பட்ட ரசீது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணங்கள் எவ்வித காரணத்தைக் கொண்டும் மீளச்செலுத்தப்பட மாட்டாது.

(iv) எல்லா வகையிலும் பூர்த்தியாகாத அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத மற்றும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப் பங்கள் கிடைக்கப்பெற்றமை அல்லது நிராகரிக்கப்பட்டமை பற்றி அறிவித்து அனுப்பப்பட மாட்டாது.

(v) எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தில் ஏதேனும் பொய்யான கூற்றொன்று இருப்பதன் காரணமாக அவரை தகைமையற்றவராக்குவதற்கும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் அவரை சேவையிலிருந்து விலக்குவதற்கும் இடமுண்டு.

இதில் குறிப்பிடப்படாத விடயமொன்று தொடர்பாக தீர்மான மெடுக்கும் அதிகாரத்தை நீதியமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

சுகத கே. கமலத்,
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

*சட்ட அறிக்கைகளை சிங்கள/தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் கிளையின் தட்டெழுத்தாளர் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்*

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

1. விண்ணப்பதாரரின் பெயர், முதலெழுத்துக்களுடன் (சிங்களத்தில்/தமிழில்) :----.
2. விண்ணப்பதாரரின் பெயர், முதலெழுத்துக்களுடன் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
3. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
4. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
5. நிரந்தர முகவரி :----.
6. நிரந்தரமாக வதியும் மாவட்டம் :----.
7. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. பிறந்த திகதி :

ஆண்டு .................... மாதம் .................... திகதி .................

10. 2010.12.10 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் ................ மாதங்கள் ............. நாட்கள் ..............

11. பால் (ஆண்/பெண்) :----.
12. இனம் :----.
13. விவாகமானவரா/விவாகமாகாதவராக என்பது :----.
14. விண்ணப்பிக்கும் தட்டெழுத்தாளர் பதவி (சிங்களம்/தமிழ் என்பது) :

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |

(உரிய கூட்டில் ' ✓ ' அடையாளம் இடவும்)

15. கல்வித் தகைமைகள் :-

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சைச் சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சைச் சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

16. பிற தகைமைகள் :----.
17. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.

(பற்றுச்சீட்டை இணைக்கவும்)

18. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதெனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு உள்ளடக்கப் பட்டுள்ள தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் தகுதியற்றவனாவேன் எனவும் நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அதுபற்றி தெரியவந்தால் எந்தவொரு நட்டஈடும் வழங்கப்படாது நான் சேவை நீக்கம் செய்வதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

***விண்ணப்பதாரர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத்/அமைச்சுத்/மாகாண சபைத் தலைவரின் சிபார்சு***

***"ஆ" பகுதி***

*(நிறுவனத் தலைவரின் சிபார்சு)*

*இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................................ திணைக்களத்தின்/ அமைச்சின்/மாகாண சபையின் ................................................ ஆக கடமைபுரிகின்றார் எனவும், பரீட்சைக் கட்டணமாக 250 ரூபா தொகையொன்று மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கில் வரவுவைக்கும் வகையில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், மேலே குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் அவரின் வேலைகள், வருகை, நடத்தை திருப்திகரமாக உள்ளதெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு தேர்ந்தெடுக் கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.*

----,
*திணைக்களத்/அமைச்சுத்/மாகாண சபைத் தலைவரின்/ அதிகாரம்பெற்ற அலுவலரின் கையொப்பமும் இலச்சினையும்.*

*பெயர் :----.*
*பதவி :----.*
*முகவரி :----.*
*திகதி :----.*

*11-752*

---

**இலங்கை வான்படை**

*அரசாணைபெற்ற அலுவலர் வெற்றிடங்கள்*

*1. இலங்கை நிரந்தர வான்படையில் ஆண்/பெண் அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன:-*

*(அ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு*
*(ஆ) உபகரணப் பிரிவு*
*(இ) விமானத் தள நிர்மாணப் பிரிவு*

*2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்ப தாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-*

*(அ)* ***இலத்திரனியல் பொறியியல் பிரிவு : இலத்திரனியல் தொலைத்தொடர்பு பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர)***

* *இலத்திரனியல் தொலைத்தொடர்பு பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ் அல்லது இலத்திரனியல் தொலைத் தொடர்பு பொறியியலில் தொழில்நுட்ப பட்டச் சான்றிதழ் (NDT) அல்லது இலத்திரனியல் பிரிவில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பெற்ற தொழில்நுட்பவியலில் டிப்ளோமா (இலத்திரனியல் தொலைத்தொடர்பு பொறியிய லில்) அல்லது NDES (இலத்திரனியல் தொலைத் தொடர்பு பிரிவில்) அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருத்தல்.*

***வலையமைப்பு பரிபாலகர்/மென்பொருள் விருத்தி யாளர் - ஆண் (நிரந்தர)***

* *4 வருடம் தகவல் தொழில்நுட்பம் BSc பட்டம்/ கணனி விஞ்ஞானம்/கணனி பொறியியலில் பூர்த்திபெற்றிருப்பதுடன் ஒரு வருட வேலை அனுபவம் இருத்தல் அல்லது கணனி விஞ்ஞானம்/கணனி விஞ்ஞானம் ஒரு பாடமாக 3 வருட BSc பட்டம் பெற்றிருப்பதுடன் இரண்டு வருட வேலை அனுபவம் இருத்தல் அல்லது கணனி விஞ்ஞானம் ஒரு பாடமாக 3 வருட தகவல் தொழில்நுட்பம் BSc பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம் BSc பட்டம்/ கணனி விஞ்ஞானம் ஒரு பாடமாக BSc பட்டம் அல்லது உயர் தேசிய டிப்ளோமா அல்லது சமமான தகைமைகள் அரசாங்க அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றிருத்தலுடன் ஒரு வருட வேலை அனுபவம் இருத்தல் அல்லது NIBM டிப்ளோமா அல்லது சமமான தகைமைகள் பெற்றிருத்தலுடன் வலையமைப்பு முகாமைத்துவத்தில் இரு வருட வேலை அனுபவம் (for Network Administrators) இருத்தல்/ஒரு வருட அனுபவம் development of application Software உடன் இரு வருட வேலை அனுபவம் (for Software Developers).*

* *சகல BSc பட்டங்களும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (University Grants Commission of Sri Lanka) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களினின்றும் பெற்றிருத்தல்.*

* *Network Administrators களுக்கு வலையமைப்பு முகாமைத்துவத்திலும் Software Developers களுக்கு ASP.NET and C#.NET பயன்படுத்தலிலும் தேவையான அனுபவம் இருத்தல்.*

* *Network Administrators களுக்கு CCNA, MCSE, Microsoft/Linux Sever இல் ஆழ்ந்த அறிவு, MS Exchangee server இல் அனுபவம் இருத்தல். Software Developers களுக்கு MCAD உடன் NET framework இல் அனுபவம், ASP.NET/C#/Visual studio உம் MS SQL Sever 2005 அல்லது 2008 இல் ஆழ்ந்த அறிவு இருத்தல் விசேட தகைமைகளாக கொள்ளப்படும்.*

* *சகல விண்ணப்பதாரர்களும் எழுத்து, செய்முறை பரீட்சை களுக்கு உட்படுத்தப்படுவர்.*

*(ஆ)* ***உபகரணப் பிரிவு : போசனசாலை முகாமையாளர் - ஆண் (நிரந்தர) :***

* *ஹோட்டல் முகாமைத்துவம் டிப்ளோமா பட்டச் சான்றிதழ் அல்லது அரசாங்க அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விருந்தோம்பல் உபசரணைக் கல்வியில் 4 தரத்திலும் முழுநேர அடிப்படை பயிற்சி பெற்றிருத்தலுடன் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் உணவுப் பிரிவில் போசனசாலையும் உணவு முகாமைத்துவமும் சம்பந்தமாக அதிகாரி மட்டத்தில் 2 வருட அனுபவம் இருத்தல்.*

(இ) ***விமானத் தள நிர்மாணப் பிரிவு :***
*சிவில் பொறியியல் அலுவலர் - ஆண் (நிரந்தர) :*

* *சிவில் பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

* *சிவில் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

*எந்திரவியல் பொறியியல் அதிகாரி (ஆண்/நிரந்தர) :*

* *எந்திரவியல் பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

* *எந்திரவியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

*மின்னியல் பொறியியல் அதிகாரி (ஆண்/நிரந்தர) :*

* *மின்னியல் பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

* *மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

*கட்டிட நிபுணர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :*

* *கட்டிடம், நிலையம் சம்பந்தமான நிபுணத்துவம்*

* *கட்டிட நிபுணத்துவத்தில் BSc (BE) உடன் MSc அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பெற்ற B/ Arch பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் இருத்தல்.*

*நிலஅளவையாளர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :*

* *மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நிலஅளவை விஞ்ஞானத்தில் பெற்ற BSc பட்டம்/இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் உறுப்பினர் (Graduate Member)/(Technical Member) உடன் பதவி சம்பந்தமாக ஒரு வருட அனுபவம்.*

**3. வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்*
(ஆ) *குடியியல் நிலை.- விவாகமானவர்/விவாகமாகாதவர்*
(இ) *பால்.- ஆண்/பெண்*
(ஈ) *வயது.- 2010.12.31 ஆந் திகதிக்கு வயது 30 க்கு கூடாதிருத்தல் வேண்டும்.*
(உ) *உயரம்.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ; பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்*
(ஊ) *மார்பு.- ஆண் 32" (குறைந்தது)*
(எ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்.- CP2*
(ஏ) *தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)*

*4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. வான்படை ஆளுநரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.*

*6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.*

***7. அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.***- *தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற் படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப் படுத்துப்படுவர்.*

*8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் நிலைகளில் Pilot Officer/Flying Officer/Flight Lieutenant/ Squadron Leader தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.*

*9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் இடங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.*

*10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப் படுகிறார்கள்.*

*11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதி யளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.*

*12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.*

*13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும்*

ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஆ) (16) ஆம் பந்தியில் கூறப் பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர் களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| பைலற் ஒபீசர் | : ரூபா 2,11,800 |
| ஃபிளையிங் ஒபீசர் | : ரூபா 2,75,220-34 X 7,740- ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | : ரூபா 3,21,660-28 X 7,740 - ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர்- | : ரூபா 3,52,620-24 X 7,740 - ரூபா 5,38,380 |
| விங் கமாண்டர் | : ரூபா 3,62,100-20 X 9480 - ரூபா 5,51,700 |
| குறூப் கப்ரன்- | : ரூபா 4,41,060-18 X 12,600 - ரூபா 6,67,860 |

(ஆ) சேவை கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 5,250 ;
(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும் ;
(3) கடினப்படி : மாதமொன்றுக்கு ரூபா 600 ;
(4) விசேட கொடுப்பனவு : யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;
(5) விசேட கொடுப்பனவு : ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் )
(6) மேலதிக கொடுப்பனவு : மாதமொன்றுக்கு ரூபா 1,000 ;
(7) சீருடை பேணுதல் படி : மாதமொன்றுக்கு ரூபா 255;
(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;
(9) உணவுப்படி : மாதமொன்றுக்கு ரூபா 10,609.75 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;
(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;
(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளை களுக்கும்);
(12) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;
(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்;
(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத் தினருக்கும்) ;
(15) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து முப்பது மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப்பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.
(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுப்படற்பாலனவாகும்.

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டக் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர் களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 03.12.2010 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம் - பிரிவு'' எனக் குறிப்பிப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல்தாபனத்தின் தலைமை யதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்பு சான்றிதழ் ;
(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;
(3) விண்ணப்பக்காரரை நன்கு அறிந்தவர்களான பொறுப்பு வாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;
(4) விளையாட்டுத்துறைகள், பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.
(5) விண்ணப்பக்காரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை விண்ணப்ப தாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

18. விண்ணபத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணபகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற் கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதித் தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டப்ளியூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார் சீப் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படை
............... பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர்

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) :----.
2. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு):----.
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
4. விண்ணப்பிக்கும் துறை :----.
5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.
6. நிரந்தர முகவரி :----.
7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :----.
8. அஞ்சல் முகவரி :----.
9. பிறந்த திகதி :----.
10. உயரம் :
11. மாவட்டம் :----.
12. தேர்தற் தொகுதி :----.
13. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
14. தொலைபேசி இலக்கம் :----.
15. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
16. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :-

| பாடசாலை/ சர்வ கலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தி யடைந்த பாடங் களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

17. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

18. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

19. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.
20. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.
21. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.
22. இதற்கு முன் ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படை அணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.
23. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

*24.* சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக : ----.

*25.* இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

*26.* நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

*27.* விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

*11-757*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

*கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்*

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2010**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* **பரீட்சை.-** இப்பரீட்சை 2010, திசெம்பர் மாதம் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

**சேவை நிபந்தனைகள்.-** அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவர் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப் பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவைக்கு ஈர்ப்புச் செய்துகொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்கள் யாவரும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரச கரும மொழிக்கும் மேலாக ஏனைய அரசகரும மொழித் தொடர்பிலும் திறனை, சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையிற்கும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

*4.* **சம்பளத்திட்டம்.-** MN-3-2006 A – ஆராய்ச்சி உதவியாளர் சேவையின் II "அ" தரத்திற்கு ரூபா 15,005 – 4 x 180 – 6 x 240 – 11 x 320 – 20 x 360 - ரூபா 27,885. (பொ. நி. சு. 07/2008 இற்கு அமைய மாதாந்தம்)

இச்சம்பளத் திட்டத்தின் ரூபா 15,005 – 4 x 180 – 6 x 240 – ரூபா 17,165 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும்.

வகுப்பு II "ஆ" வில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத்திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

*5.* **வயதெல்லை.-** (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்குக் குறையாமலும் 45 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது)

(ii) விண்ணப்பகாரர் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) தேகாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

*6.* **கல்வித் தகைமைகள்.-** இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலை ஒன்றில் இருந்து வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் சித்தியடைந்து இருத்தல்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/கணிதப் பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

அல்லது

அதற்கு சமமானதோர் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் டிப்ளோமாவினை பெற்றுள்ளவர்கள் அப்பல்கலைக்கழகத்தில் அந்த டிப்ளோமாவிற்குரிய அடிப்படை பாடநெறியில் சித்தியடைந்து இருப்பின் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதில் இருந்து விடுவிப்புச் செய்யப்படுவர்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை**.- ஆரம்பத் தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினூடாக நடாத்தப்படுகின்ற பொதுப் போட்டிப் பரீட்சையில் அமர்தல் வேண்டும்.

(i) பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு திறமை அடிப்படையில் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதி செய்து கொண்டு விண்ணப்பக்காரர் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப் பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

8. **பரீட்சை**.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) பரீட்சையின்போது மொழி மூலத்தினை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம்.- ரூபா 300. கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகத்தில் மாற்றத்தக்கவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக்கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) பரீட்சைப் பாடங்கள்.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

(அ) விவேகப் பரீட்சை

(ஆ) தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்

(vi) பாடத்திட்டம் :

(அ) விவேகப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

இதில் விண்ணப்பக்காரர் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

இவ்வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப் பட்டிக்கும் -

(i) ஆய்வுகூட உபகரணங்களை இனங்காணுதலும் அவற்றினைப் பராமரித்தலும்.

(ii) நோயைக் கண்டறியும் பொருட்டு செய்யப்பட வேண்டிய ஆய்வுமுறைகள் :

நோயியல் (Pathology)
ஒட்டுண்ணியியல் (Parasitology)
நுண்ணுயிரியல் (Microbiology)
நீர்ப்பாயவியல் (Serology)
போஷணை (Nutrition)

(iii) தரத்தினை நிர்ணயிக்க மேற்கொள்ளப்படும் ஆய்வுமுறைகள்.

பௌதீகப் பரிசோதனை
இரசாயனப் பரிசோதனை
புலன் பரிசோதனை

(iv) ஆய்வுகூடத்தை கவனமாகப் பேணுதல், கிருமி அழித்தல்.

(v) மாதிரியை பெற்றுக்கொள்ளல், களஞ்சியப்படுத்தல், கொண்டுசெல்லல்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை**.- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களினையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2010.11.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி

வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்க :-

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர் ;

(ஆ) முகவரி ;

(இ) விண்ணப்பம் தபாலிலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களில் ஒளிப்படப் பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(இ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா சான்றிதழ்.

**விண்ணப்பக்காரரது ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சை தினத்திற்கு 3 வருடத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்)

**பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்ப தகைமை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையினின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I : தொகுதி (II அ) வின் பந்தியில் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றின் பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினை பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

(பேராசிரியர்) ஏ. டி. என். சந்திரசிரி,
கால்நடை உற்பத்தி,
சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் (க. பா.).

கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைத் திணைக்களம்,
பேராதனை,
2010.10.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டான விண்ணப்பம் - 2010

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

[ ] (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக)

1. பெயர் :-
   - 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
     (உதாரணம் SILVA, B.A.)
   - 1.2 முழுப் பெயர் (தமிழில்) :-----.
   - 1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :-
   - 2.1 தனிப்பட்ட :-----.
   - 2.2 அலுவலக :-----.
   - 2.3 தபால் முகவரி :-----.

3. 3.1 பால் :-

| |
|---|
| ஆண் |
| பெண் |

(உரிய கூட்டில் '✓' அடையாளம் இடுக) :-

3.2 பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 குடியியல் நிலை :

விவாகமானவர் : ☐

விவாகமாகாதவர் : ☐

(உரிய அடைப்பில் '✓' அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :-----.

4.1 க. பொ. த. (சா. த. ) பரீட்சை :-
வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (உ. த. ) பரீட்சை :-
வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெறப்பட்ட நிறுவனம் :-----.
(ஆ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெற்ற திகதி : -----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :-----.

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் : -----.
காசுக்கட்டளை இலக்கம் :-----.

பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை தீவின் எந்தவொரு தபால் பணிமனையிலும் செலுத்தி 'கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம்' எனும் பெயரில் மாற்றக்கூடிய பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்
வழங்கும் அலுவலகம் – பேராதனை

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :-----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ்**

உத்தியோகத்தரால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும் இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

11-633

---

## இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்னும் பதம் அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும். 'சேவை' என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

2. **எழுத்துமூலப் பரீட்சை.**- இப்பரீட்சை பின்வரும் வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) பொது விவேகம்
(ii) கட்டுரையும் சுருக்கமும்
(iii) பொது அறிவு
(iv) முகாமைத்துவ உளச்சார்பு

*பரீட்சைத் திகதி.*- இப்பரீட்சை 2011 மாச்சு மாதம் 'கொழும்பிலும் (நகர இல. 01), யாழ்ப்பாணத்திலும் (நகர இல. : 02) நடாத்தப்படும். இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு

இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

வாய்மொழிப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்/ அமைச்சரவையால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பில் அமைவு முறையில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை செயலாளர் தீர்மானிப்பார்.

3. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

**4. சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப் பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் அமைய தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் சேவையின் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவார்.

4.1 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்கள் இரத்துச் செய்ய இடமுண்டு.

**5. அமைவும் மாதாந்த வேதன அளவுத்திட்டமும் :**

| | | |
|---|---|---|
| விசேட தரம் | : | ரூபா 42,390 - 12 × 1,310 - ரூபா 58,110 |
| வகுப்பு I | : | ரூபா 36,755 - 17 × 1,050 - ரூபா 53,555 |
| வகுப்பு II | : | ரூபா 30,175 - 8 × 790 - ரூபா 35,705 |
| வகுப்பு III | : | ரூபா 22,935 - 10 × 645 - ரூபா 29,385 |

(நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் I ஆவது வினைத்திறன்காண் தடையும் நியமனத் திகதியிலிருந்து 06 வருடகாலப்பகுதிக்குள் II ஆவது வினைத்திறன்காண் தடையும் சித்தியடைய வேண்டுமென்பதுடன் நியமனம் கிடைக்கப்பெற்று 05 ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் பிரகாரம் இரண்டாவது அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்படுகின்றது.

**6. உடல் நிலைமையும் ஒழுக்கமும்.**- பரீட்சார்த்தி நல்ல உடல் நிலையுடையவர் என்றும், நல்லொழுக்கமுடையவரென்றும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் நல்ல கண் பார்வை உடையவராகவும் இருக்க வேண்டுமென்பதுடன் இத்தீவில் எப்பகுதியிலேனும் சேவையாற்றத்தக்க உடல்நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும்.

**7. தகைமைகள்.**- இதற்காக தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

(அ) பல்கலைக்கழக பட்டம் வலுப்பெறும் திகதி 2010.12.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் 2010.12.27 ஆந் திகதியில் 28 வயதை அடையாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(v) ஏதேனுமொரு சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்தில் உள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு :-**

(i) இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் இப்போட்டிப் பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேலாக தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்கு தேவைப்படும் தகைமைகள் 2010.12.27 ஆந் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**8. பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். மாவட்டச் செயலகத்திலிருந்து/ பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

**9. விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அதை 8 1/2 "x 12" (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 3.11 வரையிலான கூடுகளை விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 4.0 தொடக்கம்

8.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாக கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தில் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்கு தோற்ற விரும்புகிறாரோ அம்மொழியில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சை திணைக்களம், (ஒழுங் கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை) பெலவத்தை, பத்தரமுல்லை" என்று முகவரியிடப்பட்டு 2010.12.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2010" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குபின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 240,360 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக் கப்பட மாட்டாது. இலங்கை பரீட்சை திணைக்களம் விண்ணப்ப தாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பியதும், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகளும் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்புக்கு வெளியிடமாயின் அனுமதி அட்டை அனுப்பி வைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதத்தையும் உடன் வைத்துக் கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

10. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முன்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் விதி ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இந்த விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது.

11. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவை யெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

13. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் / அமைச்சரவையின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை முறையும் பரீட்சை மொழியும்**.- (அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம்மொழி மூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கருமமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந்திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கருமமொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு** :

(i) மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட ''தகைமை பெற்ற பல்கலைக்கழக பட்டம்'' எனும் சொற்றொடர் 7 (ii) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையை குறிக்கும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

15. **தெரிவுசெய்யும் முறை**.- பின்வரும் பாடங்களைக் கொண்ட ஒரு எழுத்துப் பரீட்சை :-

| | |
|---|---|
| (i) பொது விவேகம் (காலம் : 1 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (ii) கட்டுரையும் சுருக்கமும் (காலம் : 2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |
| (iii) பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |
| (iv) முகாமைத்துவ உளச்சார்பு (காலம் : 2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

**வாய்மொழித் தேர்வு (25 புள்ளிகள்)**.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவால்/அமைச்சரவையால் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். (புள்ளிகள் வழங்கும் முறை நியமன அதிகாரியால்/அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.)

16. எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை திறமை ஒழுங்கின்படி நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதலானது நியமனம் வழங்குவதற்கான தகைமையாக கருதுதல் ஆகாது.)

17. **பாடத்திட்டம்**.- (i) பொது விவேகம்.- (காலம் : 1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்) சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் சோதிப்பதன் மூலம் அவற்றை கிரகிப்பதில் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படும். (இந்த வினாப் பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்.)

(ii) கட்டுரையும் சுருக்கமும் (காலம் : 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்) தரப்பட்ட தலைப்புக்கள்/தொனிப்பொருட்கள் பலவற்றில் இருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்துகொள்ளும் தலையங்கங்கள்/தொனிப்பொருள்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் சமர்ப்பித்தல், ஒன்று திரட்டல் மற்றும் பரப்புதல் என்பவற்றில் பரீட்சார்த்திக்கு உள்ள தர்க்கரீதியான சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் ஒன்றை அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து அதன் முக்கிய கருத்துக்களை தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை தெரிவிப்பதில் அவருக்கு உள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(iii) பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) தேசிய ரீதியிலும் வலய ரீதியிலும் உலகில் பல அமைப்புச் சுற்றாடல்களினுள் போன்று எமது சமூகத்தில் நிலவுகின்ற சமூக, கலாச்சார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது. (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்.)

(iv) முகாமைத்துவ உளச்சார்பு (காலம் : 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் இனம் காணுதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச் செல்லுதல், தொடர்புத் துறைகளிலான திறமை, சுய ஒழுக்கம் கொள்கை மற்றும் உபாய வழிமுறைகளை தயாரித்தல் ஆகிய வகையில் பரீட்சார்த்தி ஒருவரிடம் உள்ள சிறந்த முகாமைத்துவ திறமைகளை அவரிடம் முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிப்பது இதன் மூலம் எதிர் பார்க்கப்படுகின்றது. (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்.)

அமைச்சரவையின் கட்டளைப் படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2010, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

**Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Administrative Service - 2010**

1.0 மொழி மூலம் :

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

2.0 நகரம் :

பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் :

நகர இலக்கம்

(பரீட்சை அறிவித்தலின் பந்தி இலக்கம் 2 இன்படி)(நகரத்தை பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

3.0 தனிப்பட்ட தகவல்கள் .-

3.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----. (உதாரணம் : SILVA, A. B.)

3.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) : -----.

3.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.6 பால் : (ஆண் - 0, பெண் - 1) :
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.7 திருமணமானவரா?/திருமணமாகாதவரா?
(திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.8 இனத்தொகுதி :
(சிங்களம் -1/தமிழ் - 2/இந்தியத் தமிழ் - 3/ முஸ்லிம் - 4/ வேறு - 5)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3.10 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.11 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியில் வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4.0 இலங்கை நிருவாக சேவைக்கு நியமனம் செய்வதற்காக இதற்கு முன் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகளைக் குறிப்பிடவும்).

(அ) -----.
(ஆ) -----.
(இ) -----.

5.0 (i) பல்கலைக்கழக பட்டம் பெற்ற திகதி :-----.

(இத்தகைமைகள் உள்ளனவா என்பதைப் பார்ப்பதற்காகத் தயவு செய்து அறிவித்தலின் 7 (11) ஐ நன்றாக வாசிக்கவும்.

(ii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

(iii) பதிவு இலக்கம் :----.

(iv) வெளிவாரி/ உள்வாரி :----.

(v) பட்டம் :----.

(vi) பாடங்கள் :----.

(vii) வகுப்பு :----.

(viii) மேல்தரம்/குறைந்த :----.

(ix) சுட்டெண் :----.

(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

6.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டைஇதில் நன்கு ஒட்டிவிடவும் :

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.)
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்)

7.0 **பரீட்சார்த்தியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ................ ஆம் இலக்க ........... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும் இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச்செய்வதற்கு

எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதி, ஒழுங்குகளுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*8.0* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
(வர்த்தமானி அறிவித்தலின் 9(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................ (முழுப்பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் நன்கு தெரிந்தவர் எனவும் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ............ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
(அலுவலக முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
முகவரி :-----.
திகதி :-----.

11-775

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.